Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**

**திருவள்ளூர் (இ) பூந்தமல்லி**

**அமர்வு வழக்கு எண்.115 of 2021**

Depositions of : PW2(LW2)
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **தேவபிரகாசம்** | **தொழில்** | : | |
| **தந்தை பெயர்** | : | | **முகவரி** | : | |
| **வயது** | : | | **மாவட்டம்** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of October - 2025.

**(எதிரிகள் ஆஜரில் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது)**

**முதல் விசாரணை=**

**நான் தற்போது டி.9, பட்டாபிராம், போக்குவரத்து காவல் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.02.2021 அன்று இரவு வி.5 திருமங்கலம் போக்குவரத்து சுற்று காவல் பிரிவில் பணியில் இருக்கும் போது 05.02.2021 அதிகாலை 2.30 மணிக்கு எஸ்டேட் ரோடு மங்கல் ஏரி பார்க் அருகே ரோந்து வந்த போது அங்கே ஒரு இருசக்கர வாகனத்தில் டீ விற்றுகொண்டு இருந்த ஒரு நபர் எங்களிடம் சற்று தள்ளி ஏரி அருகே 3 பேர் சண்டை போட்டுக்கொண்டிருப்பதாக சொன்னார். நாங்கள் அங்கு போய் அங்கிருந்த 3 பேரிடம் கேட்டபோது அவரகளில் ஒருவர் வாவினை நோக்கியும் மற்ற இருவர் மண்ணூரபேட்டை ரோட்டை நோக்கியும் போய்விட்டார்கள். இது தொடர்பாக அன்று மாலை 4.00 அளவில் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை =

நான் 04.02.2021 அன்று பணியில் இருந்தேன் என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் பாக்கெட் நோட் வைத்திருக்க வேண்டும் என்றால் சரிதான். அதில் பணி நேரத்தில் என்ன செய்தோம் என்பதை குறிக்கவேண்டும் என்றால் சரிதான். போக்குவரத்து பிரிவில் ஜி.டியில் தான் அதனை குறிப்போம். எங்களது சுற்று காவல் வாகனம் எங்கு எங்கு போனது என்பதையும் ஜி.டியில் குறிப்போம். திருமங்கலம் – எஸ்டேட் ரோடு பிராதான பகுதி என்றால் சரிதான். அன்றைய தினம் சாதாரனமாக தான் சுற்று காவல் வந்தோம். சிக்னலில் இருந்து 20 மீ தூரத்தில் மங்கல் ஏரி பார்க் உள்ளது. அங்கு இருட்டா பகுதியில் மூவரும் சண்டைபோட்டு கொண்டிருந்தார்கள். சம்பவ காலம் கோரோனா காலம் என்றால் சரிதான். போக்குவரத்துகொஞ்சம் குறைவாக இருந்தது என்றால் சரிதான். மெயின் ரோட்டில் தெரு விளக்குகள் இருந்தன. ஓரத்தில் சிரிது இருட்டாக இருந்தது. அந்த இடத்தில் போலீஸ் பூத் இருந்தது போலீஸ் யாரும் இல்லை. நான் எச்சரித்தவுடன் 3 பேரும் போய்விட்டார்கள். நான் என் மேலதிகாரி சொன்னதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் தொடரப்பும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.